**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.903/2019 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-1/PW- 2 <br> Name : செந்தில் <br> Father's/Husband's Name : கல்யாணம் <br> Nationality : Indian | Village: <br> Age :47 <br> Taluk : திருவிடைமருதூர் <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 11.03.2026**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி. அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

காவல் நிலையத்தில் கொடுத்த புகார் நான் எழுதியதுதான். மேற்படி புகாரின் உள்ளடக்கத்தில் சம்பவம் நடந்த தேதி மற்றும் ஊர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தது காளியம்மன் கோவில் அருகில் என்று உள்ளது என்றாலும் ஊர் பெயர் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் காலை 10.30 மணிக்கு நடந்தது. புகார் எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் காலை 11 மணிக்கு புகார் கொடுத்துவிட்டு மருத்துமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்ந்தேன். நான் கும்பகோணம் அரசு

மருத்துமனையில் மாலை 4 மணிக்கு சிகிச்சையில் சேர்ந்தேன். திருவிடைமருதூர் காவல் நிலையத்திலிருந்து கும்பகோணம் அரசு மருத்துமனைக்கு 1/2 மணி நேரத்தில் செல்லலாம் என்றால் சரிதான். நான் 11 மணிக்கு புகார் கொடுத்துவிட்டு 4 மணிக்கு சிகிச்சையில் சேரும் வரை 7 மணி நேரம் காலதாமதத்திற்கு காரணம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வெளி நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டு அதன் பின்னிட்டு உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்ததால் காலதாமதம் ஆனது. மேற்படி வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வித்து பதிவேட்டில் மருத்துமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த நேரம் மாலை 4.05 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலிசார் என்னை மருத்துமனையில் விசாரித்தார்கள் தேதி ஞாபகமில்லை. என்னை விசாரித்த அதிகாரி முதலில் ஆதி போலிசார் விசாரித்தார். வேறு யாரும் என்னை விசாரிக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள கெட்ட வார்த்தைகள் மற்றும் கொல்லாமல் விடமாட்டேன் என்ற வார்த்தைகள் எதுவும் நான் கொடுத்த புகாரில் இல்லை என்றால் சரிதான். புகாரில் எதிரி என்னை கட்டையால் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றாலும் மருத்துவர் விசாரணையில் எதிரி என்னை பைப்பால் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றாலும் சரிதான். நான் புகாரில் கட்டை என்றும் மருத்துவர் விசாரணையில் பைப் என்று சொல்லியுள்ளதும் எது சரியானது என்றால் நான் அடிபட்டவுடன் கீழே விழுந்ததால் எனக்கு தெரியவில்லை. 17.02.2018 அன்று நான், எனது தம்பி அன்பழகன், அசோக், எனது மச்சான் செல்வம் மற்றும் சிலருடன் பயங்கரமான ஆயுதங்களால் தாக்கி ஆபாசமாக பேசி கொடுங்காயத்தை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்ததாக திருவிடைமருதூர் காவல் நிலைய குற்ற எண் 25/2018 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கில் ஜாமினில் வந்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கு தற்போது நிலுவையில்

உள்ளது என்றால் சரிதான். அந்த புகாரில் 17.02.2018 ம் தேதி காலை 9 மணியளவில் நான் எதிரியை அடித்து மிரட்டியதாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யானபுகார் ஒன்றை கொடுத்து 17.02.2018 மாலை 4 மணியளவில் 8 மணி நேரத்திற்கு பிறகு நான் மருத்துமனையில் சேர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் தேதி நேரத்தில் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் எதிரி மருத்துவ சிகிச்சையில் இருந்தார் என்றால் சரியல்ல. நான் எதிரி தாக்கல் செய்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எதிரி மீது வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**